இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 237 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 25 – புதன்கிழமை 08 ஏப்ரல் 2026 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 237 : Thiruvalluvar Year - 2057 - Panguni 25 - Wednesday 08 April 2026 - Madurai 16 Pages ₹ 5.00

## சீர்காழியில் நடைபயிற்சி மேற்கொண்டபோது பொதுமக்களிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாக்கு சேகரித்த காட்சி!





சீர்காழியில், சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு வருகைபுரிந்த கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (7.4.2026) அங்கு நடைபயிற்சி மேற்கொண்டபோது, அங்குள்ள பொதுமக்களைச் சந்தித்து சீர்காழி தொகுதி ம.தி.மு.க. வேட்பாளர் ஆர்.செந்தில் செல்வனுக்கு வாக்கு சேகரித்தார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும் பூம்புகார் தொகுதி வேட்பாளருமான நிவேதா எம்.முருகன் உள்ளார்.

### ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# இந்தியாவிலேயே தொழில்துறையில் தமிழ்நாடு முதலிடம்!

## புள்ளிவிவர ஆதாரத்துடன் ரிசர்வ் வங்கி அறிக்கை!

**சென்னை, ஏப். 8 -**

**திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் தொழிற்சாலைகளில் ரூ. 9 இலட்சத்து 65 ஆயிரத்து 378 கோடி மதிப்புடைய பொருள்களை உற்பத்தி செய்து இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம்! 2019-2020 ஆம் ஆண்டு எடப்பாடி பழனிசாமியின் அ.தி.மு.க ஆட்சியில் தொழிற்சாலைகளில் ரூ. 5 இலட்சத்து 28 ஆயிரத்து 581 கோடி மதிப்புடைய பொருள்கள் மட்டுமே உற்பத்தி! திராவிட மாடல் ஆட்சியின் ஐந்து ஆண்டுகளில் தொழில் உற்பத்தி 82.6 சதவீத அசுர வளர்ச்சி! இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள 2024 - 2025 ஆம் ஆண்டுக்கான புள்ளி விவரங்கள் திராவிட மாடல் அரசின் இச்சாதனையை கொட்டி முழக்குகின்றன!**

2021இல் திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், இளைஞர்கள், மகளிர் ஆகியோரின் வேலை வாய்ப்புகளை அதிகம் உருவாக்கும் நோக்கிலும் பல்வேறு புதுமையான முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

### தமிழ்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தொழில் முகவர் மாநாடுகள்!

தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பல்வேறு சலுகைகளை வழங்கி தொழில் தொடங்கிட ஊக்கமளிக்கத் தொடங்கினார்கள். தமிழ்நாட்டில் சென்னை, கோவை, தூத்துக்குடி, மதுரை, கிருஷ்ணகிரி முதலிய பல்வேறு இடங்களில் முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தினார்கள்.

தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளில் குறிப்பாக சிங்கப்பூர், மலேசியா, அரபு நாடுகள், ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்பெயின் முதலிய நாடுகளுக்கும் சென்று முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தி, புதிய தொழிற்சாலைகள் தொடங்குவதற்குத் தேவையான நில வசதிகள், உட்பட அனைத்தையும் திராவிட மாடல் அரசு வழங்கும் அத்துடன், அறிவும் ஆற்றலும் நிறைந்த கல்வி, தொழில்நுட்பத்தில் சிறந்த மனிதவளமும் தமிழ்நாட்டில் நிறைய உள்ளன என்பதை எடுத்துக் கூறி தொழில் தொடங்க வருமாறு அழைப்பு விடுத்தார்கள்.

மு.க.ஸ்டாலின் அவர்களின் கடுமையான உழைப்பின் பயனாக, கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் பல்வேறு நாடுகளின் தொழில் முகவர்களுடன் 1176 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு 12.16 இலட்சம் கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடுகள் ஈர்க்கப்பட்டு புதிய தொழில்கள் தொடங்குவதற்கான வாய்ப்புகள் பெருகி 100 க்கும் மேற்பட்ட புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன. 36 இலட்சம் இளைஞர்களுக்கும், மகளிருக்கும் புதிய வேலை வாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகளின் உற்பத்திகள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு; இந்திய ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம் என ஒன்றிய அரசு சான்று வழங்கியுள்ளது.



**இந்நிலையில் ஒன்றிய அரசின் ரிசர்வ் வங்கி 2024-2025 ஆம் ஆண்டுக்கான தொழில் உற்பத்தி மதிப்பீடுகளை அண்மையில் வெளியிட்டு இந்தியாவின் தொழில் துறைத் தலைவனாகத் தமிழ்நாடு நிகழ்த்தியுள்ள ஒரு வரலாற்றுச் சாதனையைப் பறைசாற்றியுள்ளது!**

இந்தியாவின் தொழில் வரைபடத்தில், தமிழ்நாடு 2024-25ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாட்டின் தொழில்துறை உற்பத்தி மொத்த மதிப்பு ரூ. 9 இலட்சத்து 65 ஆயிரத்து 3.78 கோடி, இதன்மூலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தைப் பிடித்துள்ளது.

அ.தி.மு.க ஆட்சியில் தொழிற்சாலைகளில் ரூ. 5 இலட்சத்து 28 ஆயிரத்து 581. 86 கோடி மதிப்புடைய பொருள்களை மட்டுமே உற்பத்தி செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எப்போதும் எதிலும் குஜராத் மாடல் என்று பெருமையடித்துக் கொள்ளும் குஜராத் மாநிலத்தில் தொழிற்சாலை உற்பத்தி மதிப்பு மிகமிகக் குறைவு என்பதால் இந்தப் புள்ளிவிவரங்களில் சுட்டிக்காட்டப்பட வில்லை போலும். ஆனால்.**

**மகாராட்டிர மாநிலத்தில் ரூ. 9,50,569.23 கோடி,**
**உத்தரபிரதேச மாநிலத்தில் ரூ. 7,34,898.64 கோடி,**
**ராஜஸ்தான் மாநிலத்தில் ரூ. 4,26,472.1 கோடி,**
**மத்திய பிரதேச மாநிலத்தில் ரூ. 3,19,839.03 கோடி**

**என பி.ஜே.பி ஆளுகின்ற மற்ற எல்லா மாநிலங்களையும் பின்னுக்குத் தள்ளி தொழிற்சாலை உற்பத்தியில் இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம் என்னும் மகத்தான சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.**

இந்த மாபெரும் சாதனைக்கு திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களே முக்கிய காரணம் என்பது அதிகாரபூர்வமாக நிரூபணம் ஆகியுள்ளது.

### திராவிட மாடல் ஆட்சியில் அசுர வேக வளர்ச்சி!

கடந்த 2019-20ஆம் ஆண்டில் ரூ. 5.28 லட்சம் கோடியாக இருந்த தொழில்துறை உற்பத்தி மதிப்பு, இன்று இந்த உச்சத்தை எட்டியிருப்பது வெறும் எண்கள் அல்ல; இது தமிழகத்தின் அசுர வளர்ச்சியின் அடையாளம். இந்த குறுகிய காலத்தில் மாநிலம் எட்டியுள்ள 82.6% வளர்ச்சி, தமிழகத்தின் வலுவான தொழில்துறை கட்டமைப்பு, தொலைநோக்குக் கொண்ட அரசு





கொள்கைகள் மற்றும் உற்பத்தித் துறையில் தமிழ்நாடு கொண்டுள்ள மேலாதிக்கத்தைப் பறைசாற்றியுள்ளது

### நிலையான வளர்ச்சி - நீடிக்கும் பெருமை!

மற்ற மாநிலங்கள் ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தாலும், மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்கு திட்டங்களால் தமிழ்நாடு தனது சீரான மற்றும் நிலையான செயல்பாட்டின் மூலம் (Consistent Performance) இந்த வெற்றியை வசப்படுத்தியுள்ளது. இது வெறும் பொருளாதார உயர்வு மட்டுமல்ல; உலகத் தரம் வாய்ந்த உற்பத்தி மையமாகத் தமிழ்நாடு மாறியிருப்பதன் நிதர்சனமான உண்மையாகும்.



## டெல்லி பாதுஷாக்களின் தலையாட்டிகளைப் புறக்கணிப்போம் !

## தமிழர்கள் தலை நிமிரப் பாடுபடும் ஸ்டாலின் தரப்பை வலுப்படுத்துவோம் !

